Judicial Form No.53
(see Rule 42)
DEPOSITION OF WITNESS
Chapter XXIII Code of Criminal Procedure
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

STC.No:-813 / 2022 Date:- 09.07.2025.

Deposition of witness for prosecution :- PW :-4

| | | | |
|---|---|---|---|
| Name | கோபாலன் | Age | |
| Father/Husband Name | | Taluk | |
| Village | | | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act 1969 | | | |

<u>முதல் நிலை விசாரணை:-</u>

1. நான் எரங்காட்டுப்பாளையத்தில் வசித்துக்கொண்டு மினி ஆட்டோ டிரைவராக வேலை செய்து வருகிறேன். 2011-ம் வருடம் தேதி ஞாபகம் இல்லை சத்தி - காவிலிபாளையம் ரோடு வழியாக புளியம்பட்டி சந்தைக்கு N 6 என்ற அரசுப் பேருந்தில் என்னுடைய மனைவி விஜயலட்சுமியும், என்னுடைய மகன் கௌதம் ஆகியோர்கள் பயணம் செய்தார்கள். மேற்படி பேருந்தானது அண்ணா நகர் திருப்பத்தில் மாலை 05.00 மணிக்கு வேகமாக சென்றபோது என்னுடைய மனைவி விஜயலட்சுமியும், என்னுடைய மகன் கௌதம் ஆகியோர்கள் வெளியே விழுந்துவிட்டார்கள். நான் அந்த சமயத்தில் வீட்டிலிருந்தேன். எனக்கு போன் மூலமாக தகவல் கூறினார்கள்.

2. பின்னர் இருவரையும் கோவை ராமகிருஷ்ணா மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தோம். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை:-</u>

1. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி பேருந்தில் கூட்டம் அதிகமாக இருந்தது என்றால் சரியல்ல. என்னுடைய மனைவியும், மகனும்

பஸ்ஸின் முன் படிக்கட்டிற்கு அருகில் நின்றுகொண்டு பயணம் செய்தார்கள் என்றால் சரியல்ல.

2. நான் போலீசார் விசாரணையில் பேருந்தில் கூட்டமாக இருந்தது என்றும், என்னுடைய மனைவியும் மகனும் முன் படிக்கட்டிற்கு அருகில் நின்றுகொண்டிருந்ததாக கூறியிருந்தால் அது தவறு என்றால் சரிதான்.

3. விபத்து ஏற்பட்டதாக கூறும் பகுதி வளைவான பகுதி என்றால் சரிதான். வளைவான பகுதியில் பேருந்து வேகமாக செல்ல வாய்ப்பில்லை என்றால் சரியல்ல வேகமாகச் சென்றது. என்னுடைய மனைவியும் மகனும் எந்த பேருந்து நிறுத்தத்தில் ஏறினார்கள் என்றால் எரங்காட்டுப்பாளையத்தில் ஏறினார்கள்.விபத்து ஏற்பட்டதாகக் கூறும் இடத்திற்கும் எரங்காட்டுப்பளையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 500 மீட்டர் தூரம் இருக்கும்.

4. எரங்காட்டுப்பளையத்திற்கு அடுத்த பேருந்து நிறுத்தம் 1 கி.மீ தள்ளியுள்ளது. கிராமப் பேருந்துகள் அனைத்தும் அளவான வேகத்தில் செல்லும் என்றால் சரிதான். என்னுடைய மனைவியும் மகனும் படிக்கட்டிற்கு அருகில் அஜாக்கிரதையாக பயணம் செய்ததால்தான் கீழே விழுந்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. வண்டி புறப்பட்டு 500 மீட்டர் தூரத்தில் அதிவேகமாக செல்ல வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு இவ்வழக்கின் எதிரி காரணமில்லை என்றும், என்னுடைய மனைவியும், மகனும்தான் காரணம் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை –**</u> இல்லை.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என்முன் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்துப்பார்த்து/விளக்கி கூறி சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.